THE CARE AND SUPPORT SECTOR

A LIFE CHANGING LIFE

careandsupportjobs.gov.au

## பராமரிப்பு மற்றும் ஆதரவுத் துறையில் பணியாற்றல்

பராமரிப்பு மற்றும் ஆதரவுத் துறையானது ஆஸ்திரேலியாவில் வெகு வேகமாக வளர்ந்துவரும் வேலைவாய்ப்புச் சந்தைகளில் ஒன்றாகும். முதியோர் பராமரிப்பு, இயலாதோருக்கான ஆதரவு மற்றும் முன்னாள் இராணுவ-வீரர்கள் பராமரிப்பு ஆகிய துறைகளில் இப்போது வேலை வாய்ப்புகள் உள்ளன.

## பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையில் பணியாற்றுதலை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையில் நீங்கள் ஆற்றும் பணி இன்றியமையாதது. ஏனெனில், உங்களுடைய சேவைகளைப் பெறுவோரது வாழ்க்கையினை உங்களது பணி மேம்படுத்துகிறது. தனிப்பட்ட மற்றும் தொழில்ரீதியான அனேக பயன்களையும் இது உங்களுக்கு அளிக்ககலாம்.
வளர்ந்துவரும் இந்தத் துறையில் வாய்ப்புகள் பல உள்ளன. உங்களுக்கு ஏற்புடைய நேரங்களில் பணியாற்றலாம்.. இதனால், உங்கள் வாழ்க்கை வீட்டில் மற்றும் பணியிடத்தில், அல்லது வேலை மற்றும் படிப்பிற்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்திக் கொள்ள இயலும்.

இந்தத் துறையில் உள்ள வேலைகள் பல வகைப்பட்டவை. இவற்றில் பல வகைப்பட்ட பணிநிலைகளும், தொழில் பாதைகளும் உள்ளன. இந்த வேலைகளில், நீங்கள் பணியாற்றும் ஒவ்வொரு நாளும் மற்றொரு நாளைப் போல இருக்காது.

தமது சேவைகளைப் பெறுபவர்களுடன் பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைப் பணியாளர்கள் வெகுமதி மிக்க தொடர்புறவுகளைப் பெரும்பாலும் வளர்த்துக்கொள்வர்.

உங்களுடைய சேவையைப் பெறுபவர்கள் அவர்களது இலக்குகளை அடைய, அவர்களது திறன்கள், தனித்தியங்குதல், மகிழ்ச்சி மற்றும் ஆற்றலை வளர்க்க, அவற்றைத் தொடர்ந்து பராமரிக்க நீங்கள் உதவுவீர்கள். நீங்கள் ஆற்றும் பணியானது அவர்களது வாழ்க்கையில் ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும்.

## நான் யாருக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளை வழங்குவேன்?

பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையில், நீங்கள் வயதானவர்களுடன் பணியாற்றி அவர்களது இல்லங்களில் தனித்தியங்க உதவலாம் அல்லது முதியோர் இல்லங்களில் அவர்கள் வசதியாக இருக்க உதவலாம்.

நீங்கள் இயலாதோர்களுடனும் பணியாற்றி அவர்கள் தமது இலக்குகளை அடையவும், தமது திறன்களையும் தனித்தியங்குதலையும் வளர்த்துக்கொள்ளவும் உதவலாம்.

நீங்கள், முன்னாள் இராணுவ-வீரர்களுக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைகளை அளிக்கலாம். இவர்கள் ஆஸ்திரேலியப் பாதுகாப்புப் படைகளில் பணியாற்றியுள்ளவர்களாவர். அவர்கள் எவ்வொரு வயதினராகவும், பாலினத்தைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம். சிலர் இயலாதோராகவும் இருக்கலாம்.

பல வகைப்பட்ட பின்புலங்கள், கலாச்சாரங்கள் மற்றும் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்ட மக்களோடு நீங்கள் பணியாற்றக் கூடும்.

## இந்த வேலை எப்படிப்பட்டதாக இருக்கும்?

பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையில் பல வகையான வேலைகள் உள்ளன.

### தனி-நபர் பராமரிப்பு மற்றும் ஆதரவுப் பணியாளர்

ஆதரவுப் பணியாளர்கள் மக்களுக்கு அவர்களுடைய அன்றாட அலுவல்களில் உதவுவார்கள். இதனால், சேவை பெறுபவர்கள் இன்னும் முழுமையாகவும், சுதந்திரமாகவும் வாழ இயலும்.

வெவ்வேறு நபர்களுக்கு பல்வேறு காரணங்களுக்காக உதவி தேவைப்படும். குளியல், சுகாதாரச் செய்கைகள், உணவு அருந்துதல், ஆடை அணிதல் போன்ற தனிநபர் செயல்களில் சிலருக்கு உதவி தேவைப்படும். மற்றவர்களுக்கு வெளியே சென்று பிறரைச் சந்திப்பதில் அல்லது வேலைக்குச் செல்வதில் உதவி தேவைப்படலாம்.

கடைக்குச் செல்லுதல், சாப்பாடு தயார் செய்தல், துப்புரவு அல்லது தோட்ட வேலை போன்ற செயல்களைச் செய்து நீங்கள் தமது வீட்டை ஒருவர் பராமரித்து வர உதவலாம்.

நீங்கள் அளித்துள்ள ஆதரவுகள், சேவை பெறுபவரது பொது-நலம், அவருக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகள், அல்லது தனது இலக்குகளை அடைவதில் அவர் கண்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் தவறாமல் அவ்வப்போது அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டியிருக்கலாம்.

## வீட்டு அலுவல்களில் உதவி

வயதான ஆஸ்திரேலியர்கள், இயலாதோர்கள் மற்றும் முன்னாள் இராணுவ-வீரர்களுடைய வீட்டு வாழ்க்கையை தொடர்வதற்கான  ஆதரவுகளை அளிக்கும் பணி நிலைகள் உள்ளன. துப்புரவு வேலைகள், சமையல், வீட்டுப் பராமரிப்பு மற்றும் தோட்டவேலைகள் ஆகியன இவற்றில் அடங்கும்.

## சுகாதாரம் சார்ந்த அல்லது மற்ற சிறப்புத்துவத் தொழிலர்கள்

சுகாதாரம் சார்ந்த அல்லது மற்ற தகுதி பெற்ற தொழிலர்கள் பொதுவாக ஒரு குறிப்பிட்ட வகையான ஆதரவு அளிப்பதில் சிறப்புத்துவம் பெற்றவர்கள். பட்டப் படிப்புகள் போன்ற கூடுதல் கல்வித் தகுதிகள் இவர்களுக்கு இருக்கும்.
பேச்சு வைத்தியர்கள், உடலியக்க வைத்தியர்கள், உளவியலாளர்கள், சமூக சேவகர்கள், இயன்-மருத்துவர்கள், நடத்தைப்-பாங்கு ஆதரவாளர்கள், உணவியலாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் போன்ற தொழிலர்களுடைய சேவைகள் இதில் அடங்கும்.

## பதிவுபெற்ற அல்லது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள செவிலியர்கள்

சிகிச்சையளித்தல் அல்லது மருந்தளித்தல், மருத்துவ சாதனங்களை இயக்குதல், இதயம், சுவாசம் போன்ற முக்கிய உயிர்-அறிகுறிகளை கண்காணித்தல் மற்றும் முதலுதவி அளித்தல் போன்ற பராமரிப்புச் சேவைகளைப் பதிவுபெற்ற அல்லது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள செவிலியர்கள் அளிப்பார்கள்.
செவிலியர்கள் பல்கலைக்கழகத் தகுதிகளைப் பெற்றிருப்பார்கள் (பட்டியலிடப்பட்டுள்ள செவிலியர்கள் பட்டையம் அல்லது முது-நிலை பட்டையம் பெற்றவர்களாகவும், பதிவுபெற்ற செவிலியர்கள் இள-நிலைப் பட்டம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள்). பதிவுபெற்ற செவிலியர்கள் ‘ஆஸ்திரேலிய

செவிலியர் மற்றும் மருத்துவச்சியர் குழும'த்தில் அவசியம் முறைப்படிப் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

### மற்ற வேலைப் பொறுப்புகள்

ஆதரவு ஒருங்கமைப்பாளர்கள் மற்றும் பரிந்துரைப்புப் பணியாளர்கள் போன்ற பல-தரப்பட்ட பணிநிலைகளில் பணியாற்றுபவர்கள் இருக்கின்றனர். இவர்கள் ஆதரவுப் பணியாளர்களுடன் பணியாற்றுவார்கள்.

மேலாளர்கள், அணித் தலைவர்கள், மற்றும் மேற்பார்வையாளர்கள் போன்ற வேலை வாய்ப்புகளும்உள்ளன. மேலும், நிதி, மானிட-வளம், வரவேற்பு, தரவு-பதிவு மற்றும் சேவை வழங்குநர்களுக்கான இதர வணிகத் துறைகளில் நிர்வாக வேலை வாய்ப்புகளும் உள்ளன.

## பராமரிப்பு மற்றும் ஆதரவுத் துறையில் நான் எவ்வாறு சேரலாம்?

பராமரிப்பு மற்றும் ஆதரவுத் துறையில் பணியாற்றத் துவங்குவதற்கான வழிகள் பலவுள்ளன. செவிலியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சுகாதாரத் தொழிலர்களுக்கு முறைப்படியான கல்வித் தகுதிகள் வேண்டும். அதே வேளையில், ஆதரவுப் பணியாளர்கள் போன்ற வேலைகளுக்குக் கல்வித் தகுதிகள் தேவையில்லை.

சரியான கல்வித் தகுதிகள் உள்ளவர்களையும், சரியான நபர்களையும் கண்டறிவது வேலை அளிப்பவர்களுக்கு அவசியம். இரக்கம், நெகிழ்வுத்தன்மை மற்றும் எளிதில் அணுகக்கூடிய தன்மை ஆகிய நற்பண்புகள் உள்ளவர்களையே வேலை அளிப்பவர்கள் நாடுகிறார்கள். இக்குணங்கள் உங்களுக்கு இருப்பின் இது போன்ற வேலைகளுக்கு நீங்கள் பொருத்தமானவராக இருப்பீர்கள்.

நீங்கள் பற்கலாச்சாரப் பின்புலத்தவர் எனில், உங்களுடைய மொழித் திறனும், கலாச்சார அறிவும் உங்களுடைய மொழியைப் பேசுபவர்களுக்குப் பராமரிப்பு மற்றும் ஆதரவுகளை அளிப்பதில் உதவியாக இருக்கலாம்.

சில வேலைகளுக்காக காவல்துறை சோதனையை உள்ளடக்கிய முன்சோதனையை நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். உங்களுடைய பணியை நீங்கள் துவங்கும்

முன் உங்களுடைய முதலாளி இதற்கான ஏற்பாட்டைச் செய்யக்கூடும். ‘முதலுதவிச் சான்று’, ‘ஓட்டுநர் அனுமதி’யும் உங்களுக்குத் தேவைப்படலாம்.

அனுபவம் இல்லாதவர்களுக்கு, பணி-நேரப் பயிற்சியை வேலை தரும் பலர் அளிப்பார்கள். மீண்டும் வேலைக்குத் திரும்புபவர்கள் அல்லது தம் தொழிலை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள் இதற்கு முன்பு அவர்கள் பெற்றிருக்கும் கல்வி மற்றும் அனுபவத்திற்கான அங்கீகாரத்தைப் பெறலாம். தேவைப்பட்டால், உங்களுடைய திறன்களையும், வேலைக்கான ஆயத்த நிலையையும் நீங்கள் மேம்படுத்திக்கொள்ளலாம். எண் மற்றும் எழுத்தறிவுத் திறன்களையும் நீங்கள் வளர்த்துக் கொள்ளலாம். இதற்கான தெரிவுகள் பல உள்ளன.
இதைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள https://www.careandsupportjobs.gov.au/skills-and-training எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறை பற்கலாச்சாரத்தினை வரவேற்கிறது

பலவித சூழல்களில் இருப்பவர்களுக்கும், பல பின்புலங்களிலிருந்து வருபவர்களுக்கும் பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையானது ஏற்றதாக இருக்கலாம்.
நீங்கள் பாடசாலைக் கல்வியை முடிப்பவராக இருக்கலாம், பணியில் சேர்வதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கலாம் அல்லது நீங்கள் உங்களுடைய கொள்கைகளுக்கு ஏற்ற மற்றும் மன நிறைவைத் தரும் வேலையைத் தேடிக்கொண்டிருக்கலாம்.

உங்களுடைய திறன்களையும், அனுபவத்தினையும் பெரும்பாலும் முறைப்படி அங்கீகாரப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன், உங்களது சேவைகைளைப் பெறுபவர்களுடன் அர்த்தமுள்ள தொடர்புறவுகளை ஏற்படுத்திக்கொள்ள உங்களுடைய சொந்த அனுபவங்களும், பின்புலமும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கலாம்.

THE CARE AND SUPPORT SECTOR

A LIFE CHANGING LIFE

careandsupportjobs.gov.au

## வேலை ஒன்றைக் கண்டெடுங்கள்

பராமரிப்பு மற்றும் ஆதரவுச் சேவைத் துறையைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ளவும், தற்சமயம் கிடைக்கும் வேலைகளைப் பற்றிய தேடலை மேற்கொள்ளவும் www.careandsupportjobs.gov.au எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.